**அனுப்புநர்**

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்

**ந.க.எண்.100627/டி/2019** **நாள் : 04.02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஏப்ரல் 2020 தக்கல் திட்டம் மூலம் தனித்தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்பது குறித்து வானொலி / தொலைக்காட்சிகளில் அறிவுக்கவும் நாளிதழ்களில் செய்திக் குறிப்பு வெளியிடக் கோருதல் – சார்பு

*********

ஏப்ரல் 2020–ல் நடைபெறவிருக்கும் தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு தக்கல் திட்டம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்வது குறித்தான 'செய்திக்குறிப்பு' ஒன்றினை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

பொதுமக்களின் நலன்கருதி மேற்படி தகவல்களை அனைத்து மாவட்டங்களிலும் இதனை வானொலியில் / தொலைக்காட்சிகளில் / பத்திரிகையில் செய்தியாக ஒலி/ஒளி பரப்புமாறும்/வெளியிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது ''விளம்பரம் அல்ல'' என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு:**
செய்திக்குறிப்பு

# தமிழ்நாடு அரசு

# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

# எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஏப்ரல் 2020

# தனித்தேர்வர்களுக்கான தக்கல் திட்டம்

## செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல் :**

ஏப்ரல் 2020–ம் ஆண்டில் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **27.01.2020 (திங்கட்கிழமை) முதல் 31.01.2020 (வெள்ளிக்கிழமை) வரை** விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. மேற்காண் நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

01.01.2020 அன்று 12 ½ வயது பூர்த்தி அடைந்த தனித்தேர்வர்கள் தக்கல் திட்டத்தின் மூலம் கீழ் **10.02.2020 முதல் 12.02.2020** வரை மூன்று நாட்களுக்கு மட்டும் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) சென்று online மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம் :**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– (5X20=100+10+10+5=125) , சிறப்புக்கட்டணம் ரூ.500/– (அரசாணை எண்.19, பள்ளிக்கல்வித்துறை, நாள்:13.02.2003) மற்றும் ஆன்லைன் மூலம் விண்ணப்பத்தினைப் பதிவு செய்யும் கட்டணம் ரூ.50/–, மொத்தம் ரூ.675/–ஐ தனித்தேர்வர்கள் சேவை மையங்களிலேயே நேரடியாக செலுத்தலாம். (ரூ.125+ரூ.500+ரூ.50=ரூ.675, அனைத்து தேர்வுகளும் எழுதுபவர்களுக்கு)

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை :**

   1. **முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள் :**

      (i) அன்னார் இறுதியாக பயின்ற பள்ளியிலிருந்து பெற்ற அசல் பதிவுத்தாள் / அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். பள்ளியில் பயிலாதவர்கள் தமது அசல் பிறப்பு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

   2. **ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்தபாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள் :**

      (i) தனித்தேர்வராக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

      (ii) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின் / சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

   - **வ.எண்.1 மற்றும் 2–ல் குறிப்பிடப்பட்ட தனித்தேர்வர்கள் ரூ.45/–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.**

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் வழி பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

6. ஆன்லைன் விண்ணப்பங்களை தேர்வர்கள் **12.02.2020 அன்று மாலை 5.00** மணி வரை சேவை மையங்களில் பதிவு செய்யலாம்.

ஒம்/–
**இயக்குநர்**

**இடம் :** சென்னை–6.
**நாள் :** 04.02.2020